வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல. 33/2025

எனது இல. **NP/07/10/01/172**
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்.
*2025.10.07*

செயலாளர், சுகாதார அமைச்சு,
மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
சுதேச மருத்துவ திணைக்களம்,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம்,
பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களங்கள்,
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண பொதுச் சேவையின் ஆரம்பமட்ட தேர்ச்சி பெற்ற சேவை வகுதியைச் சேர்ந்த (PL3) வைத்தியசாலை மேற்பார்வையாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - 2023(2025)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சுச் செயலாளரின் NP/04/01/Recruit(HO)/2023 இலக்க 2023.04.11ம் திகதிய கடிதம், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/AB/H/A/2023/10 இலக்க 2023.08.10ம் திகதிய கடிதம் மூலமான அனுமதி மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுச் செயலாளரின் NP/04/01/SM/PD/Hos.Ov இலக்க 2025.08.05ம் திகதிய கடிதம் மூலம் கையளிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டம் உள்ளடங்கிய சிபார்சு ஆகியவற்றுக்கமைவாக, வடக்கு மாகாண பொதுச் சேவையின் வைத்தியசாலை மேற்பார்வையாளர் தரம் III பதவிக்கு நிலவும் **முப்பத்தினான்கு (34)** வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கமைய, இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளுமுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியும். இவ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2025ம் ஆண்டு நவம்பர் மாதமளவில் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி ***2025.10.24*** ஆகும்.

### 02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :

*02.1* 2019.04.08 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2023.02.27ம் திகதியில் அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலை மேற்பார்வையாளர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தத்திற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30ம்** இலக்க **2013.07.03ம்** திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை மற்றும் இப்பதவியுடன் தொடர்புபட்டு, காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள், கட்டளைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த **வைத்தியசாலை மேற்பார்வையாளர்** பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

*02.2* எழுத்துப்பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு என்பனவற்றின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து ஓராண்டு காலம் பதில் கடமை தகுதிகாண் கால அடிப்படையில் வைத்தியசாலை மேற்பார்வையாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த பதவியின் தரம் III இற்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று (03)** வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 நியமன அதிகாரியால் பணிக்கப்படும் பாதுகாப்பு தொடர்பான செயலாற்றுகைக்கு ஒழுகி நடத்தல் வேண்டும்.

02.4 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

02.5 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து **மூன்று (03)** வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

02.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட இவ் வெற்றிடங்கள் தொடர்பில் பகுதியளவு வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :

2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025க்கு அமைவான, சம்பளத் தொகுதி **PL 3 - 2025**க்கு ஏற்ப **வைத்தியசாலை மேற்பார்வையாளர் தரம் - III** பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டமானது **ரூபா 42,780 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - 66,540/-** ஆகும். (இவ் அளவுத்திட்டத்தின் நான்காவது படிநிலையை அடைய முன் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை - III** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக விதித்துரைக்கப்பட்ட சம்பளம் இப்பதவியின் பொருட்டு வழங்கப்படும்.

## 04. பொதுவான தகைமைகள் :

04.1 இவ் ஆட்சேர்ப்பானது இப் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் / சேவைப்பிரமாணக்குறிப்பு ஏற்பாடுகளுக்கமையவே மேற்கொள்ளப்படும்

04.2 தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள், அரச தாபன நடைமுறை விதிகளின் ஒழுங்குகள் என்பன இவ் ஆட்சேர்ப்புக்கு பொருத்தமாக அமையும். மேலும் மாகாணசபை, கௌரவ ஆளுநர், பிரதம செயலாளர், மற்றும் திணைக்கள ஒழுங்குகள் விதிகள் மூலம் வெளியிடப்படும் கட்டளைகள் விதிகள் என்பனவும் பொருத்தமாக அமையும்.

04.3 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் **இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

04.4 **உச்ச வயதெல்லை** ஏற்புடையதல்ல.

## 05 கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :

05.1 **கல்வித் தகைமை :**
கல்விப் பொதுத் தராதர (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்விற்கு மேற்படாமல் இரு (02) திறமைச்சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

05.2 **அனுபவம் :**
பரிசாரகர் பதவியின் தரம் I இல் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவையை பூர்த்தி செய்தவர் அல்லது பரிசாரகர் பதவியில் விசேட தரத்தினை கொண்டவராக இருத்தலுடன் இப்பதவிக்கான சேவைப்பிரமாணக்குறிப்பில் விதித்துரைக்கப்பட்டவாறு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

05.3 **உடற் தகைமை :**
ஒவ்வொரு பரீட்சார்த்தியும் வடமாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உடல், உள ஆரோக்கியத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

05.4 **ஏனையவை :**

I. பரீட்சார்த்தியானவர் சிறந்த ஒழுக்க நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
II. **விண்ணப்பம் கோரும் திகதியில்** இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்ட சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## 06 ஆட்சேர்ப்பு முறை :

06.1 எழுத்து மூலப்போட்டிப்பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப்பிரமாணக்குறிப்பு, தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இச்சுற்றறிக்கையில் கோரப்பட்ட தகைமைகளும், அதனை நிரூபிக்கும் ஆவணங்களும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

06.2 எழுத்துப் பரீட்சையில் வினாப்பத்திரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் **நாற்பது வீத (40%)** புள்ளிகளை பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்விற்குத் தகைமை பெறுவர். எவ்வாறாயினும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட உயர்புள்ளி ஒழுங்கில் (Merit Order) வேண்டப்படும் எண்ணிக்கையானோர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் விபரங்கள் சுட்டெண் ஒழுங்குவரிசையிலாக தயாரிக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்காக வடக்கு மாகாண சுகாதார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படும். எனினும் விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளிகளின் வரிசை ஒழுங்கே ஆட்சேர்ப்பு வெற்றிடங்களை நிரப்பும் தேவைப்பாட்டுக்காகக் கருத்தில் கொள்ளப்படும்.

06.3 மேலே குறிப்பிட்டவாறு ஆட்சேர்ப்புக்கு தெரிவு செய்யப்படுபவர்களுள், விசேட தேவையுடையோருக்கான (மாற்றுத் திறனாளிகள்) ஒதுக்கீடு, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 27/88 இற்கமைய கவனத்திற் கொள்ளப்படும். அவ்வாறு பரீட்சார்த்தியொருவர் நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது உடல், உள நிலைமைகள் தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

குறிப்பு :-
விண்ணப்பதாரி மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு நிலைமையின் கீழ் உரியவாறு விண்ணப்பிக்கின்றார் என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்பதுடன் அங்கவீனமற்ற ஆள் ஒருவர் அங்கவீனமுற்ற ஆளொருவராக அவராகவே கருதக் கூடாது.

## 07 பரீட்சைக் கட்டணம் :

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா. 500.00ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகமொன்றிலும் காசுக்கட்டளையாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக் கூடியவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08 விண்ணப்பிக்கும் முறை :

08.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தினை www.np.gov.lk என்ற வடக்குமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது கைமூலத் தபாலிலோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/172"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.3 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை தமது திணைக்களத்தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவர் சிபார்சு செய்யாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

08.4 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

08.5 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம்.

08.6 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல. 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: 021 221 9939 / தொலைநகல் இல: 021 221 9940 / மின்னஞ்சல்: **exampPscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

## 09 ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :

09.1 பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

09.2 மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகத்தையும், மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சைமண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

## 10 பொய்யான தகவல்களுக்கான தண்டனை :

விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11 கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 12 பரீட்சைத் திட்டம் :

எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை என்பன கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வகையில் முறையே பாடவிதானம், புள்ளியிடல் திட்டம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

### 12.1 எழுத்துப் பரீட்சை :

இவ் எழுத்துப் பரீட்சையானது பின்வருமாறான வினாத்தாளைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தமக்குரிய ஒரு மொழி மூலத்தை தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| வடக்கு மாகாண நடைமுறை விதிகள் மற்றும் தாபனவிதிக் கோவை | நியமனம், தகுதிகான் காலம், பதவி உறுதிப்படுத்தல், வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை, பதவி உயர்வு, விடுமுறைகள், சேவை மூப்பு, சம்பளம், வேதனவேற்றம், சேவை முடிவுறுத்தல், மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு, பிரயாணப்படி, இடமாற்றம், சீருடை, பொதுநடத்தை, ஆரம்ப விசாரணை, குற்றச்சாட்டுப்பத்திரம், ஒழுக்காற்று கட்டளை தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக அமையும். | 02 மணித்தியாலம் | 100 |
| விடயத்துடன் தொடர்பான அறிவு | வைத்தியசாலை மேற்பார்வையாளர் பதவிக்கான கடமைகளுடன் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக அமையும். | | |

### 12.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை :

எழுத்துப் பரீட்சையில் 40% புள்ளிகளை பெற்று சித்தியடைந்த பரீட்சார்த்திகளில் பிரிவு 06.2 இல் கூறப்பட்டவாறான எண்ணிக்கையினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது, கீழ்குறிப்பிடப்படும் புள்ளித்திட்டத்திற்கமைவாக சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகச் சபையால் மேற்கொள்ளப்படும்.

| விடயம் | புள்ளிகள் | உச்சப் புள்ளி |
|---|---|---|
| (1) சேவைமூப்பு (Seniority) | | 60 |
| 1.1 விசேட தரம் | | |
| அ. விசேட தரத்திலுள்ள ஒவ்வொரு ஆண்டுக்கும் | 10 | |
| ஆ. விசேட தரத்தில் ஆறு (06) மாதத்திற்கு மேற்பட்ட பன்னிரண்டு (12) மாதத்திற்கு குறைவான காலப்பகுதிக்கு | 05 | |
| 1.2 தரம் I இல் ஐந்து (05) வருடங்களுக்குப் பின்னரான | | |
| அ. ஒவ்வொரு ஆண்டுக்கும் | 05 | |
| ஆ. ஆறு (06) மாதத்திற்கு மேற்பட்ட பன்னிரண்டு (12) மாதத்திற்கு குறைவான காலப்பகுதிக்கு | 2.5 | |

| | | |
|---|---|---|
| **(2) அனுபவம், திறன்கள் மற்றும் அறிவு (Experience, Skills and knowledge)**<br>2.1 **அனுபவம் 1** - வைத்தியசாலை மேற்பார்வையாளர் பதவிக்கு பதில் கடமை புரிந்தமை. (நியமன அதிகாரியினால் பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்)<br>அ. ஒரு வருட பூர்த்தி செய்தமைக்கு<br>ஆ. ஆறு (06) மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பூர்த்தி செய்தமைக்கு<br><br>2.2 **அனுபவம் 2** – நிரந்தர வதிவிடத்துக்குரிய மாவட்டத்திற்கு அப்பால் / மாவட்டத்திற்கு வெளியே கடமையாற்றியமை.<br>அ. ஒரு வருட பூர்த்தி செய்தமைக்கு<br>ஆ. ஆறு (06) மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பூர்த்தி செய்தமைக்கு<br><br>2.3 **திறன்கள் மற்றும் அறிவு - வாய்மொழியான (Viva)**<br>அ. தமிழ்/சிங்களம்/ஆங்கில மொழித்திறன் மற்றும் கணனி அறிவு | 04<br>02<br><br>02<br>01<br><br>05 | 35 |
| **(3) நேர்முகத் தேர்வு (Interview Board)**<br>வைத்தியசாலை மேற்பார்வையாளர் பதவியுடன் தொடர்புடையதான அணுகுமுறை (Attitude), ஆளுமை (Personality) மற்றும் தொடர்பாடல் திறன்கள் (Communication Skills) | | 05 |
| **மொத்தம்** | | 100 |

## 13 பரீட்சைப் பெறுபேறுகள் :

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழையும் **www.np.gov.lk → Exams & Recruitments → Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-**

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் 021 221 9939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இச் சுற்றறிக்கையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இவ்வறிவித்தலை தங்களது அமைச்சு / திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் தகைமையுள்ள சகல உத்தியோகத்தர்களின் கவனத்திற்கும் கொண்டு வரவும்.

(vi) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk → **Exams and Recruitments → Advertisement → 2025** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

ஆழ்வாப்பிள்ளை சிறி,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2025.10.07